**மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 18.09.2025 அன்று சென்னையில் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளின் புகைப்படத் தொகுப்பு.**





● ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி வானுவம்பேட்டை பகுதியிலும், சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி துரைப்பாக்கம் பகுதியிலும் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமை ஆய்வுசெய்து பொதுமக்களுடன் கலந்துரையாடினார்.













● தண்டையார்பேட்டையில் நடந்த விழாவில் சி.பி.சி.எல். நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு நிதியிலிருந்து, 300 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.75 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



● சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் கழிவுநீர் அகற்றும் பணிகளை மேற்கொள்ள ரூ.1.5 கோடி மதிப்பீட்டில் இரண்டு வாகனங்களைத் தொடங்கிவைத்தார்.





● ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்டுள்ள மீன் அங்காடிகளைத் திறந்துவைத்தார்.

# ஆலந்தூர் - சோழிங்கநல்லூர் மண்டலங்களில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டு தீர்வு!

சென்னை, செப். 19-

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலந்தூர் மண்டலம், சோழிங்கநல்லூர் மண்டலம் ஆகிய பகுதிகளில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்களை நேரில் பார்வையிட்டு மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களுடன் கலந்துரையாடி, தீர்வுகளை வழங்கினார்.**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.9.2025) ஆலந்தூர் மண்டலம், வார்டு-165 வானுவம்பேட்டை, பழண்டியம்மன் கோயில் தெருவில் உள்ள பழண்டியம்மன் திருமண மண்டபம், சோழிங்கநல்லூர் மண்டலம்,

வார்டு-195 துரைப்பாக்கம், மேட்டுக்குப்பம், பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள எலிம் மெட்ரிகுலேஷன் பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை நேரில் பார்வையிட்டு மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களுடன் கலந்துரையாடி தீர்வுகளை வழங்கினார்.

பொதுமக்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள், திட்டங்களின் கீழ் பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து தீர்வு காணும் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தின் கீழ் ஜூலை 15 முதல் நவம்பர் 2025 வரை அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 10,000 முகாம்கள் நடைபெறவுள்ளன.





இத்திட்டத்தின் கீழ் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், மருத்துவ சேவைகளை வழங்க, மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் “உங்களுடன் ஸ்டாலின்” முகாம்களில் மட்டுமே வழங்கப்படுகின்றன.

மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று, விண்ணப்பத்தினை பெற்று, பூர்த்தி செய்து தங்கள் விண்ணப்பத்தினை அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தின் கீழ் முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறுகின்றன.

நேற்று (18.9.2025) பெருநகர சென்னை மாநகராட்சி ஆலந்தூர் மண்டலம் வார்டு-165 வானுவம்பேட்டை, பழண்டியம்மன் கோயில் தெருவில் உள்ள ஸ்ரீபழண்டியம்மன் திருமண மண்டபம், சோழிங்கநல்லூர் மண்டலம் வார்டு-195 துரைப்பாக்கம், மேட்டுக்குப்பம், பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள எலிம் மெட்ரிகுலேஷன் பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” முகாமில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, எரிசக்தித்துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை உள்ளிட்ட 13 அரசுத்துறைகள் மூலம் மக்களிடமிருந்து மனுக்கள் பெற்று உரிய பதிவுகளை மேற்கொண்டு அதற்கான ஒப்பமும் வழங்கப்பட்டது. முகாமிற்கு வருகை தந்த பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், சிறப்பு மருத்துவ முகாமும் நடத்தப்பட்டது.

மேலும் தூய்மை பணியாளர்களுக்கு அரசின் மூலம் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளின் விவரங்கள், நலத்திட்ட உதவிகளை பெறத்தேவைப்படும் ஆவணங்கள் குறித்த தகவல் தொகுப்பு கையேடு முகாமிற்கு வருகை தந்த தூய்மை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்களில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமில் பொதுமக்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மருத்துகள் வழங்கப்படுவதையும் பார்வையிட்டதுடன், வார்டு-165 வானுவம்பேட்டை, பழண்டியம்மன் கோயில் தெருவில் உள்ள ீரீபழண்டியம்மன் திருமண மண்டபத்தில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமில் மருத்துவ பரிசோதனை செய்து கொண்டார்.

மேலும் முகாம்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்த துணை முதலமைச்சர் அவர்கள் மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களுடன் கலந்துரையாடி, தீர்வுகளை வழங்கினார்.

இந்த ஆய்வின்போது சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், மண்டலக்குழுத் தலைவர் வி.இ.மதியழகன், மாமன்ற உறுப்பினர் க.ஏகாம்பரம் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.